பொங்கல் பண்டிகை: எடப்பாடி பழனிசாமி வாழ்த்து

சென்னை, ஜன. 12: பொங்கல் பண்டிகையையொட்டி, அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி கே.பழனிசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

உழவர்கள் வாழ்வில் ஏற்றம் பெற வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன் அதிமுக ஆட்சிக் காலங்களில் விவசாயிகளுக்கு எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. ஏராளமான நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டதுடன், விவசாயிகள் அனைவரும் மகிழ்ச்சியடைந்து வாழ்ந்து வந்ததை பெருமையுடன் நினைவு கூர்கிறேன்.

அறுவடைத் திருநாளாம் பொங்கல் திருநாளில், மக்கள் அனைவரும் குன்றாத நலமும், குறையாத வளமும் மங்காத புகழும் செல்வமும் பெற்று நிறைவு வாழ்வு வாழ இறைவனை பிரார்த்திக்கிறேன் எனத் தெரிவித்துள்ளார் எடப்பாடி பழனிசாமி.

நாளை துக்ளக் 55–ஆவது ஆண்டு நிறைவு விழா

மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் பங்கேற்பு

சென்னை, ஜன. 12: சென்னையில் செவ்வாய்க்கிழமை (ஜன.14) நடைபெறவுள்ள துக்ளக் இதழின் 55–ஆவது ஆண்டு நிறைவு விழாவில் சிறப்பு அழைப்பாளராக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியூஷ் கோயல் பங்கேற்கவுள்ளார்.

துக்ளக் இதழின் 55–ஆவது ஆண்டு நிறைவு விழா சென்னை ஆழ்வார்பேட்டை நாரதகான சபாவில் ஜன.14–ஆம் தேதி மாலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்கும் மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் 'பாரதத்தின் எழுச்சி – சவால்கள்' என்ற தலைப்பில் உரையாற்றவுள்ளார்.

இதே போன்று 'தலைகீழான தமிழ்நாடு' என்ற தலைப்பில் தமிழ்நாடு தன்னுரிமை கழகத்தின் தலைவர் பழ.கருப்பையா, 'இன்றைய அரசியல்' என்ற தலைப்பில் துக்ளக் இதழ் ஆசிரியர் எஸ்.குருமூர்த்தி ஆகியோரும் பேச உள்ளனர்.

ஆர்வம்...

சென்னை வர்த்தக மையத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அயலகத் தமிழர் தின விழாவில், முதல்வருடன் தற்படம் எடுத்துக்கொண்ட அயலகத் தமிழர்கள்.

நுரையீரல் தொற்று: சுகாதாரத் துறை முன்னெச்சரிக்கை

சென்னை, ஜன.12: தமிழகம் முழுவதும் பனிப் பொழிவு மற்றும் குளிர் நிலவுவதால் அடுத்த சில நாள்களுக்கு நுரையீரல் சார்ந்த தொற்றுகள் அதிகரிக்கவாய்ப்புள்ளதாகவும், பொது மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்றும் பொது சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் செல்வவிநாயகம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:

தமிழகத்தில் அனைத்து விதபருவகால தொற்றுகளும் கட்டுப்பாட்டுக்குள் உள்ளன. குறிப்பாக, டெங்கு, சிக்குன் குனியா போன்ற கொசுக்கள் மூலம் பரவும் பாதிப்புகள் அதிகமாக இல்லை.

கடந்த ஆண்டில் டெங்கு பாதிப்புக்குள்ளானவர்களின் எண்ணிக்கை கூடுதலாக இருந்தபோதிலும் உயிரிழப்பு நிகழாத வகையில் தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

தற்போது இன்ஃப்ளூயன்ஸா, சுவாசப் பாதை தொற்று (ஆர் எஸ்வி) பாதிப்பு போன்றவை ஆங்காங்கே காணப்படுகின்றன. இதைத் தவிர எச்எம்பி தீநுண்மி தொற்றும் வழக்கம் போல உள்ளது.

அச்சப்படும் வகையில் நோய்ப் பரவல் இல்லை. அதனால், சாதாரண சளி, காய்ச்சலுக்கு மருத்துவப் பரிசோதனைகள் செய்து கொள்ள வேண்டிய அவசியம் கிடையாது.

மூன்று நாள்களுக்கு மேற்பட்ட தொடர் காய்ச்சல், மூச்சுத் திணறல், மயக்கம், கட்டுப்பாடற்ற இணை நோய் தாக்கம் இருந்தால் மட்டுமே ரத்தப்பரிசோதனைகளும், பிற மருத்துவப் பரிசோதனைகளும் மேற்கொள்ள வேண்டும்.

நிகழாண்டில் வழக்கத்துக்கு மாறாக அதிக குளிர் நிலவுகிறது. இதுபோன்ற காலங்களில் காற்று மாசு ஏற்படும். இதனால் சுவாசப் பாதை தொற்றுகள் அதிகரிக்கும்.

அடுத்த சில நாள்களுக்கு அத்தகைய சூழல் ஏற்பட வாய்ப்புள்ளது.

அதைக் கருத்தில் கொண்டு பொது மக்கள் முன்னெச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம்.

இணை நோயாளிகள், எதிர்ப்பாற்றல் குறைந்தவர்கள், முதியவர்கள் அனைவரும் குளிர் அதிகமாக இருக்கும் நேரத்தில் வெளியே வருவதைத் தவிர்க்கலாம். அவசியமாக வெளியே செல்ல வேண்டும் என்றால் முகக் கவசம் அணிந்து கொள்ளலாம். அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பருவ கால பாதிப்புகளுக்கு சிகிச்சையளிக்கும் மருந்துகள் போதிய அளவில் உள்ளன என்றார் அவர்.

பொங்கல்: கனமழை எச்சரிக்கை வாபஸ்

வானிலை ஆய்வு மையம்

சென்னை, ஜன.12: தமிழகத்தில் திங்கள்கிழமை (ஜன.13) முதல் ஜன.18 வரை மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கிழக்கு இலங்கைக்கடல் மற்றும் அதனையொட்டிய தென்மேற்கு வங்கக்கடலில் வளி மண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதனால், தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்காலில் ஒரு சில இடங்களில் திங்கள்கிழமை (ஜன.13) முதல் ஜன.18 வரை இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

முன்னதாக, பொங்கல் தினத்தன்று (ஜன.14) அறிவிக்கப்பட்டிருந்த கனமழை எச்சரிக்கை திரும்பப்பெறப்பட்டுள்ளது. அதே நேரத்தில் மாட்டுப்பொங்கலன்று (ஜன.15) தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

மேலும், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் ஜன.13–இல் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று வானிலை மையம் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாம் தமிழர் கட்சி வேட்பாளர் விரைவில் அறிவிப்பு

சென்னை, ஜன.12: ஈரோடு கிழக்கு பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர் பொங்கல் பண்டிகை தினத்தன்று அறிவிக்கப்படுவார் என்று அந்தக் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

சென்னை போரூரில் உள்ள நாதக தலைமை அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பொங்கல் விழாவில் பங்கேற்ற அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஈரோடு கிழக்கு பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் நாம் தமிழர் கட்சி உறுதியாக போட்டியிடும். நாம் தமிழர் கட்சிக்கு மாநில கட்சிக்கான அங்கீகாரம் தற்போது வழங்கப்பட்டுள்ளது.

பொங்கல் பண்டிகை தினத்தன்று வேட்பாளரின் பெயர் அறிவிக்கப்படும் என்றார் சீமான்.

APTUS

ஆப்டஸ் வேல்யூ ஹவுஸிங் பைனான்ஸ் இந்தியா லிட்
8B, தோஷி டவர்ஸ், 205, பூந்தமல்லி நெடுஞ்சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை - 600010. போன்: 044-4565 0008.

சுவாதீன அறிவிப்பு

பிற்சேர்க்கை IV (பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) சட்டம் 2002 விதி8 (1)ன் கீழ்)

இதன் கீழ்க்கையொப்பமிட்ட நபர் ஆப்டஸ் வேல்யூ ஹவுசிங் பைனான்ஸ் இந்தியா லிட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாக பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002-கீழும், பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) சட்டம் 2002-ன் பிரிவு 13(2) விதி 3 உடன்படிக்கை-யின்படியும் தனக்கு வழங்கப்பெற்ற அதிகாரத்தின்படி, கடனாளிகள் **1.திரு. மாதவன், 2. திருமதி. அமுதா மற்றும் 3. திரு. மதன்** ஆகியோரை 18.04.2024 தேதியிட்ட கேட்பு அறிவிப்பு மூலம் அழைத்து அவ்வறிப்பில் உள்ள வீட்டு கட்டுமான கடன் கணக்கு எண்.ATIRUV0112000க்கான நிலுவைத் தொகை **ரூ.6,35,653/- (ரூபாய் ஆறு லட்சத்து முப்பத்தைந்தாயிரத்து அறுநூற்று ஐம்பத்து மூன்று மட்டும்)ஐ** மேற்சொன்ன கேட்பு அறிவிப்பை பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்த கோரப்பட்டது.

கடனாளிகள் அத்தொகையை திருப்பிச் செலுத்த தவறியமையால், இந்த அறிவிப்பு மூலம் கடனாளி மற்றும் பொதுமக்களுக்கு தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கையொப்பமிட்ட நபர், இதில் குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 13(4), மேற்சொன்ன விதிகளில் விதி 8 உடன்படிக்கையின்படி தனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் **10 ஜனவரி 2025ம் தேதியில் "அடையான சுவாதீனம்"** எடுத்துள்ளார்.

குறிப்பாக கடனாளிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இச்சொத்துடன் எந்தவொரு வில்லங்கமும் ஏற்படுத்த வேண்டாம் என்று எச்சரிக்கப்படுவதுடன், இச்சொத்தின் மீது ஏற்படுத்தும் எவ்விதமான வில்லங்கமும், ஆப்டஸ் வேல்யூ ஹவுஸிங் பைனான்ஸ் இந்தியா லிட்-க்கு செலுத்த வேண்டிய கடன் தொகை 10.01.2025 அன்றுள்ளபடி **ரூ.6,44,980/- (ரூபாய் ஆறு லட்சத்து நாற்பத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து எண்பது மட்டும்)** மற்றும் மேற்கொண்டு வரும் வட்டி ஆகியவற்றிற்கு கட்டுப்பட்டது.

பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை மீட்பதற்கு, கிடைக்கும் நேரத்தைப் பொறுத்தவரை, சட்டத்தின் பிரிவு 13ன் துணைப்பிரிவு (8)-ன் விதிகளுக்கு கடன் வாங்குபவரின் கவனம் அழைக்கப்படுகிறது.

அசையா சொத்துகளின் விவரங்கள்

நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் உடமைகளும் உரிமைகளும். அயிட்டம் 1: திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் தாலுகா, திருவள்ளூர் பதிவு மாவட்டம், திருவள்ளூர் இணை 1 துணை பதிவு மாவட்டம், தலக்கச்சேரி கிராமம், பழைய சர்வே எண்.158 (பகுதி), பட்டா எண்.150, புதிய சர்வே எண்.646/11ல் உள்ள 5635.1/2 சதுர அடி நிலத்தில் 1833 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட நிலம், எல்லைகள் : வடக்கு: குபேந்திரன் நிலம், தெற்கு: 7 அடி பாதை (ஜி அட்டவணை சொத்து), கிழக்கு: "சி" அட்டவணை சொத்து, மேற்கு: ராஜ்குமார் நிலம், விஸ்தீரணம் : கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம்: 47 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம்: 47 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கம்: 39 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம்: 39 அடி. **அயிட்டம் எண். 2:** திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் தாலுகா, திருவள்ளூர் பதிவு மாவட்டம், திருவள்ளூர் இணை 1 துணை பதிவு மாவட்டம், தலக்கச்சேரி கிராமம், பழைய சர்வே எண்.158 (பகுதி), பட்டா எண்.150, புதிய சர்வே எண்.646/11ல் உள்ள பிரிவுபடாத 337 சதுர அடி நிலம் {1011.1/2 சதுர அடி நிலத்தில் பிரிவுபடாத பங்கு நிலத்திற்கான பாதை 3ல் ஒரு பங்கு, அதாவது, 337 சதுர அடி.} எல்லைகள் : வடக்கு: B, C, F சொத்து அட்டவணை, தெற்கு: கோதண்டன் நிலம், கிழக்கு: சாலை, மேற்கு: ராஜ்குமார் நிலம். நிலத்தின் விஸ்தீரணம் : கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம்: 144.1/2 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம்: 144.1/2 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கம்: 7 அடி வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம்: 7 அடி. அயிட்டம் 1: 1833 சதுர அடி மற்றும் அயிட்டம் 2 – பாதைக்கான நிலம் 337 சதுர அடி, {1011.1/2 சதுர அடி நிலத்தில் பிரிவுபடாத பங்கு நிலத்திற்கான பாதை 3ல் ஒரு பங்கு, அதாவது, 337 சதுர அடி.} எல்லைகள்: வடக்கு : குபேந்திரன் நிலம், தெற்கு : 7 அடி பாதை (G அட்டவணை சொத்து), கிழக்கு : "C" அட்டவணை சொத்து, மேற்கு : ராஜ்குமார் நிலம்

தேதி : 10.01.2025
இடம் : தலக்கச்சேரி

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஆப்டஸ் வேல்யூ ஹவுசிங் பைனான்ஸ் இந்தியா லிட்

நெல்லையப்பர் கோயில் யானை உடல்நலக் குறைவால் உயிரிழப்பு

திருநெல்வேலி, ஜன. 12: திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர்– காந்திமதியம்மன் திருக்கோயில் யானை காந்திமதி, உடல்நலக் குறைவால் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தது.

திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலுக்கு நயினார் பிள்ளை என்பவரால் இந்த யானை உபயமாக வழங்கப்பட்டது. அதன்பின்பு, கோயில் நிர்வாகத்தால் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வந்தது. தினமும் காலையில் கஜ பூஜையில் யானை பங்கேற்கும். ஆனிப் பெருந்திருவிழாவின்போது தேருக்கு முன்பாக அலங்காரத்துடன் வலம் வரும்.

56 வயதை எட்டியிருந்த யானைக்கு, கடந்த சில மாதங்களாக பின்னங்காலில் மூட்டு வலி ஏற்பட்டு அவதியடைந்து வந்தது. கடந்த 11 ஆம் தேதி மூட்டு வலி பிரச்னையால் யானை எழுந்து நிற்க முடியாத நிலைக்கு ஆளானது. கிரேன் மூலம் தூக்கி நிறுத்தி, யானைக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. சனிக்கிழமை இரவு முழுவதும் சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில், ஞாயிற்றுக்கிழமை காலையில் யானை உயிரிழந்தது.

திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர்– காந்திமதியம்மன் கோயிலில் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்த காந்திமதி யானையின் உடலுக்கு நடைபெற்ற மகா தீபாராதனை.

தகவலறிந்ததும் இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர் கவிதா பிரியதர்ஷினி, திருக்கோயில் அறங்காவலர் குழு தலைவர் மு.செல்லையா, ஸ்ரீவில்லிபுத்தூர் – மேகமலை புலிகள் காப்பக கால்நடை மருத்துவர் கலைவாணன், திருநெல்வேலி பன்முக கால்நடை மருத்துவமனை மருத்துவர் முருகன், செல்வமாரியப்பன், கால்நடை மருத்துவக் கல்லூரி உதவிப் பேராசிரியர் மாதேஷ், திருநெல்வேலி வனச்சரக அலுவலர் சரவணக்குமார், வன வர் கேசவன் மற்றும் வனத்துறையினர், சம்பவ இடத்திற்கு வந்து யானையின் உடலைப் பார்வையிட்டனர்.

யானையின் உடல் அருகே பூஜைகள் நடத்தப்பட்ட பின் திருநெல்வேலி மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், திருநெல்வேலி சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினர் நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோரும், சிறப்பு அபிஷேகத்துக்குப் பின் திருநெல்வேலி மாவட்ட பொறுப்பு அமைச்சரும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சருமான கே.என்.நேருவும் அஞ்சலி செலுத்தினர். அப்போது திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் கா.ப.கார்த்திகேயன், பாளையங்கோட்டை சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினர் மு.அப்துல் வஹாப், துணை மேயர் கே.ஆர்.ராஜு உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

பின்னர் யானையின் உடல் கிரேன் மூலம் லாரியில் ஏற்றப்பட்டு, ரத வீதியில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

தாமரைகுளம் மைதானத்தை அடைந்ததும் யானையின் உடல் வனத்துறை மற்றும் திருநெல்வேலி அரசு கால்நடை மருத்துவமனை மருத்துவர்களால் கூறாய்வு செய்யப்பட்டது.

அதன்பின்பு, குழிக்குள் இறக்கப்பட்டு இறுதிச்சடங்குகள் நடைபெற்றன.

பெண்கள், குழந்தைகள், பக்தர்கள் ஏராளமானோர் கண்ணீர் மல்க இறுதி அஞ்சலி செலுத்தினர்.

சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்
கடன் வசூல் மற்றும் நிர்வாகத் துறை
நிர்வாக அலுவலகம் : எண்.24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612 001. மின்னஞ்சல் : cmnd@cityunionbank.in
போன் : 0435-2432322, ஃபேக்ஸ் : 0435-2431746

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல்/நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002ன் படி மறு-டெண்டருடன் கூடிய ஏல விற்பனை அறிவிப்பு

சிட்டி யூனியன் வங்கியின் கடன்தாரர்கள்/ஜாமீனீதாரர்களாகிய (1) M/s. S.K. இண்டஸ்ட்ரீஸ், எண்.184/15, விவேகக்கம் கிராமம், கிளாஞ்சூர் போஸ்ட், திருவள்ளூர் - 602021. 2) திருமதி M. ரேணுகா, க/பெ. K. முருகன், எண்.68, விவேகக்கம் கிராமம், கிளாஞ்சூர் போஸ்ட், திருவள்ளூர் - 602021. 3) திரு. K. முருகன், த/பெ. கிருஷ்ணா செட்டி, எண்.68, விவேகக்கம் கிராமம், கிளாஞ்சூர் போஸ்ட், திருவள்ளூர் - 602021. மேலும், திரு. K. முருகன், த/பெ. கிருஷ்ண செட்டி, எண்.40, சரத் கண்டிகை, விஷ்ணுவாக்கம், திருவள்ளூர் மாவட்டம் - 602021. 4) திரு. M. செயதீப், த/பெ. K. முருகன், எண்.68, விஷ்ணுவாக்கம் கிராமம், கிளாஞ்சூர் போஸ்ட், திருவள்ளூர் - 602021. 5) திரு. G. ரவிச்சந்திரன், த/பெ. கோபால் நாயுடு, கதவு எண்.12, நடுத்தெரு, பிள்ளையார் கோயில் தெரு, கிளாஞ்சூர் போஸ்ட், திருவள்ளூர் - 602021 ஆகியோர் பெற்ற கடன் நிலுவைத் தொகை 01-12-2024 அன்றுள்ளபடி ரூ.2,44,73,572/- (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்து நான்கு லட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து ஐநூற்று எழுபத்து இரண்டு மட்டும்) மற்றும் 02-12-2024 முதல் பின்வரும் மற்றும் வங்கிக்கு சேரவேண்டிய வேறு ஏதேனும் பாக்கிகள், இதர செலவுகள் ஆகிய மொத்த தொகையை வருவிக்கும் பொருட்டு வங்கியில் கூடாமான வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சொத்து 2002ன் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம், விதி 8(6)க்கு-ன் கீழ் சிட்டி யூனியன் வங்கியின் அதிகாரபூர்வ அதிகாரி அவர்களால் சீலிடப்பட்ட உண்டறுதல் கூடிய ஏலவிற்பனை அடிப்படையில் விற்பனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

குறிப்பு : 1) எங்களது **243 - திருவள்ளூர் கிளை**, உங்களில் எண்.3 கொண்டவரது வேண்டுகோளின் பேரில், உங்களில் எண்.2 கொண்டவர் உடன்-கடனாளியாகவும், விளங்குவதால் (CUB OSL TERM EMI-BR : 50181208063691)-ன் கீழ் **12.00%** வட்டி விகிதத்தில் **24-04-2020** அன்று **ரூ.22,00,000/-**தீட்டிய நிதி உதவி வழங்கியுள்ளது. இந்த கடன் கணக்கானது **14-12-2022 அன்று NPA** ஆக வகைப்படுத்தப்படுள்ளது மற்றும் **01-12-2024** அன்றுள்ளபடி கடன் நிலுவைத் தொகையானது **ரூ.25,02,258/- (ரூபாய் இருபத்து ஐந்து லட்சத்து இரண்டாயிரத்து இருநூற்று ஐம்பத்து எட்டு மட்டும்)** மற்றும் முழு கடன் தொகையையும் திருப்பிச் செலுத்தும் தேதி வரை **02-12-2024** முதல் மேற்கொண்டு மாத இறுப்புக்கான வட்டியும்; கூடுதல் அபராத வட்டி 2% மாதாந்திர வட்டியுடன் திருப்பிச் செலுத்த வேண்டும்.

2) எங்களது **243 - திருவள்ளூர் கிளை**, உங்களில் எண்.1 கொண்டவரது வேண்டுகோளின் பேரில், உங்களில் எண்.2 கொண்டவரது பிரதிநிதித்துவத்தின் பேரிலும், உரிமையாளர் என்ற முறையிலும், உங்களில் எண்கள் 2 & 3 கொண்டவர்கள் உடன்-கடனாளிகளாகவும், மற்றும் உங்களில் எண்.3 கொண்டவர் ஜாமீனாதாரராகவும், விளங்குவதால் (CUB OSL SPECIAL-BR : 50181208091698)-ன் கீழ் **13.75%** வட்டி விகிதத்தில் **11-08-2022** அன்று **ரூ.10,00,000/-**தீட்டிய நிதி உதவி வழங்கியுள்ளது. இந்த கடன் கணக்கானது **13-12-2022 அன்று NPA** ஆக வகைப்படுத்தப்படுள்ளது மற்றும் **01-12-2024** அன்றுள்ளபடி கடன் நிலுவைத் தொகையானது **ரூ.8,49,118/- (ரூபாய் எட்டு லட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரத்து நூற்று பதினெட்டு மட்டும்)** மற்றும் முழு கடன் தொகையையும் திருப்பிச் செலுத்தும் தேதி வரை **02-12-2024** முதல் மேற்கொண்டு மாத இறுப்புக்கான வட்டியும்; கூடுதல் அபராத வட்டி 2% மாதாந்திர வட்டியுடன் திருப்பிச் செலுத்த வேண்டும்.

வங்கிக்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களின் விவரம்

ஷெட்யூல் - A : (கிருஷ்ணா செட்டி மகன் திரு. K. முருகன்-க்கு சொந்தமான சொத்து)

காஞ்சிபுரம் பதிவு மாவட்டம், திருவள்ளூர் சார்-பதிவு மாவட்டம், திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் தலுகாவில் அமைந்துள்ள நிலம் மற்றும் கட்டிடம். எண்.49, விஷ்ணுவாக்கம் கிராமம், கிராம நத்தம் சர்வே எண்.184/17, பழைய சர்வே எண்.184/1B, 2 & 3 பகுதி, பரப்பளவு 2.662 சதுரடி. அதாவது 342 சதுர மீட்டர் வீட்டு மனை அதில் இதர துணைப்பகுதிகள் உட்பட. எல்லைகள் : வடக்கில் : பாலாஜி மற்றும் ரத ஆறியோருக்குச் சொந்தமான சர்வே எண்.184/16-ல் உள்ள வீட்டு மனை, தெற்கில் : சுந்தரம்மாள் மற்றும் ரேவதி ஆகியோருக்கு சொந்தமான சர்வே எண்.184/18-ல் உள்ள வீட்டு மனைகள், கிழக்கில் : லோகன் அவர்களின் வீட்டு மனை மற்றும் பொது வழி, மேற்கில் : சாலை. அளவுகள் : கிழக்கு பக்கம் 41.6 அடி, மேற்கு பக்கம் 41.6 அடி, வடக்கு பக்கம் 64 அடி, தெற்கு பக்கம் 64 அடி, மொத்தப் பரப்பளவு 2.662 சதுரடி மற்றும் அங்குள்ள டெரேஸ்டு வீடு உட்பட.

நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.34,00,000/-
(ரூபாய் முப்பத்து நான்கு லட்சம் மட்டும்)

ஷெட்யூல் - B : (கோபால் நாயுடு மகன் திரு. G. ரவிச்சந்திரன்-க்கு சொந்தமான சொத்து)

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் பதிவு மாவட்டம், திருவள்ளூர் சார்-பதிவு மாவட்டம், திருவள்ளூர் தாலுகா, எண்.29, கீழனூர் கிராமம், பரப்பளவு 12 சென்ட் இது 28 சென்ட்டில் அடங்கியது. சர்வே எண்.259, சர்-டிவிஷன் புதிய சர்வே எண்.259/4, பட்டாவின்படி எண்.484. அனைத்து துண்டுகளும், பாகங்களுடன் கூடிய நிலம் மற்றும் கட்டிடம் அமைந்துள்ளது. எல்லைகள் : வடக்கில் : கிழக்கிலிருந்து மேற்காக செல்லும் 10 அடி பாதை, தெற்கில் : கோதண்டன் நிலம், கிழக்கில் : கோவிந்தம்மாள் நிலம், மேற்கில் : கீழனூர் ரோடு. மொத்தம் 12 சென்ட் நிலம் மற்றும் அதன் இதர துணைப்பகுதிகள் உட்பட.

நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.35,00,000/-
(ரூபாய் முப்பத்து ஐந்து லட்சம் மட்டும்)

ஷெட்யூல் - C : (கிருஷ்ணா செட்டி மகன் திரு. K. முருகன்-க்கு சொந்தமான சொத்து)

காஞ்சிபுரம் பதிவு மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் தாலுகா, காஞ்சிபுரம் 1ம் இணை சார்-பதிவு மாவட்டம், எண்.97, ஏனத்தூர் கிராமம், சர்வே எண்.372/2-ல் உள்ள நிலம், சொக்கலிங்கம் நகர் என்னும் லேயவுட் லே-அவுட் செய்யப்பட்டது. இதில் கூப்பிய மனை எண்.96, பரப்பளவு 1.301 சதுர அடி மற்றும் அங்குள்ள வீடு. சேவை இணைப்பு அதன் வைப்புத்தொகை ஆகியவறுடன் இதர துணைப்பகுதிகளும் சற்றுப்பறப் பகுதிகளும் உட்பட. இதன் எல்லைகள் : வடக்கில் : பிளாட் எண். 3, தெற்கில் : 23 அடி ரோடு, கிழக்கில் : பிளாட் எண்.95, மேற்கில் : சர்வே எண். 375/4. அளவுகள் : கிழக்கு-மேற்காக வடக்கு பக்கம் 19 அடி மற்றும் தெற்கு பக்கம் 24 அடி வடக்கு-தெற்காக கிழக்கு பக்கம் 60 அடி மற்றும் மேற்கு பக்கம் 61 அடி. மொத்தம் 1.301 சதுரடி நிலம் மற்றும் கட்டிடம் அதனுடன் இதர துணைப்பகுதிகள் உட்பட. தற்போதைய பட்டாவின்படி எண். 2388. புதிய சர்வே எண். 372/2A5.

நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.14,00,000/-
(ரூபாய் பதினான்கு லட்சம் மட்டும்)

ஷெட்யூல் - D : (கிருஷ்ணா செட்டி மகன் திரு. K. முருகன்-க்கு சொந்தமான சொத்து)

அயிட்டம் எண்.1 : திருவள்ளூர் மாவட்டம், காஞ்சிபுரம் பதிவு மாவட்டம், மணவாளநகர் சார்-பதிவு மாவட்டம், திருவள்ளூர் தாலுகா, எண்.202, வெங்கட்டூர் கிராமம், இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய நிலம். பரப்பளவு 17.227 சதுரடி. புதிய சர்வே எண்கள் : 327C/25, 327C/26, 327C/26 (பாகம்), 340/3B1 (பாகம்), (பட்டா எண்.4302), 327C/27, 340/3B1A, 340/3B2, 341/2A2A, 341/2A2B (பட்டா எண்.4338) அனைத்து துண்டுகளும் மற்றும் பாகங்களுடன் கூடிய நிலம் அமைந்துள்ளது. எல்லைகள் : வடக்கில் : பூந்தமல்லி - திருவள்ளூர் ரோடு, தெற்கில் : வசந்தம்மாள் அவர்களின் நிலம், கிழக்கில் : லலிதம்மாள் அவர்களின் நிலம் (ஃபளாட் எண்.50), மேற்கில் : 20 அடி ரோடு. **அயிட்டம் எண்.2 :** குடியிருப்பு அடுக்கம், இப்பரப்பளவு ஏறக்குறைய 915 சதுரடி கொண்ட ஆப்பர் பில்டப் ஏரியா (பொதுப் பகுதி உட்பட.), ஃபளாட் எண் A310 - "அத்தி ராயல்" எனும் அடுக்குமாடி கட்டடத்தின் மூன்றாவது தளத்தில் அமைந்திருப்பது. இதுதவிர 353 சதுர அடி பிரிவினை செய்யப்படாத மற்றும் பங்கும் மேலே அயிட்டம் எண்.1-ல் விவரிக்கப்பட்டுள்ள 17.227 சதுர அடி மீதான பாத்தியதையும் உட்பட.

நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.33,00,000/-
(ரூபாய் முப்பத்து மூன்று லட்சம் மட்டும்)

ஷெட்யூல் - E : (K. முருகன் மனைவி திருமதி M. ரேணுகா-க்கு சொந்தமான சொத்து)

திருவள்ளூர் மாவட்டம், காஞ்சிபுரம் பதிவு மாவட்டம், திருவள்ளூர் சார்-பதிவு மாவட்டம், திருவள்ளூர் தாலுகா, எண் 48, விஷ்ணுவாக்கம் கிராமம், பரப்பளவு 4.140 சதுரடி (0.9 ஏக்கர் 1/2 சென்ட்). பழைய கிராம நத்தம் சர்வே எண்.184/1B, 2, 3, சர்-டிவிஷன் புதிய கிராம நத்தம் சர்வே எண்.184/15, பட்டாவின்படி எண் 30. அனைத்து துண்டுகளும், பாகங்களுடன் கூடிய கிராம நத்தம் நிலம் மற்றும் கட்டிடம். SK இன்டஸ்ட்ரீஸ் எனும் பெயரிலும் வழக்கையிலும் கட்டப்பட்டது. எல்லைகள் : வடக்கில் : பாலாஜின் நிலம், தெற்கில் : முருகன் வீடு, கிழக்கில் : கிராம நத்தம் சர்வே எண்.184/15-ன் கிழக்கு பக்க பிளாட், மேற்கில் : பஞ்சாயத்து ரோடு. அளவுகள் : கிழக்கு-மேற்காக வடக்கு பக்கம் 65 அடி 3 அங்குலம். கிழக்கு-மேற்காக தெற்கு பக்கம் 65 அடி 3 அங்குலம். வடக்கு-தெற்காக க